**O.S.No. 232/2013**

**DW3 : சவின்குமார்** தேதி 29.10.2025

**பிவாசா 3 சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு, 1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

என் தாத்தா 4ம் பிரதிவாதியான ஸ்ரீரங்ககவுண்டருக்கு பூர்வீக சொத்துகள் இல்லை என்று சொன்னால் சரியல்ல உள்ளது. தாவா சொத்துகள் என் தாத்தாவின் சுய சம்பாத்திய சொத்துகள் என்று சொன்னால் சரியல்ல. 27.6.1998 மற்றும் 22.11.1990 தேதியில் 1ம் பிரதிவாதிக்கு எழுதி கொடுத்த தானசெட்டில்மென்ட் பத்திரங்கள் செல்லும் என்று சொன்னால் சரியல்ல. 12.6.1997 ல் 2ம் பிரதிவாதி 4ம் பிரதிவாதிக்கு எழுதி கொடுத்த கிரைய பத்திரம் செல்லும் என்று சொன்னால் சரியல்ல. 3 மற்றும் 4 பிரதிவாதிகள் தனிப்பட்ட முறையில் குடோன் கட்டி அனுபவித்து வருகிறார்கள் என்று சொன்னால் சரிதான். 27.6.1988 1ம் பிரதிவாதி 4ம் பிரதிவாதிக்கு எழுதி கொடுத்த தானசெட்டில்மென்ட் பத்திரத்தில் என் தந்தை சாட்சி கையெழுத்திட்டுள்ளார் என்று சொன்னால் அது எனக்கு தெரியாது. 7.12.2004 ம் தேதியில் 4ம் பிரதிவாதி தனக்கு பாத்தியப்பட்ட 1 ஏக்கர் 20 சென்ட்டை அவருடைய மகள் 7ம் பிரதிவாதி சரஸ்வதிக்கு தானசெட்டில்மென்ட் எழுதிவைத்து விட்டார் என்றால் சரிதான் அது இந்த வழக்கு தாக்கல் செய்த பிறகு தான் எனக்கு தெரியவந்தது. 7.1.2008 மேற்படி சரஸ்வதி 8 ம் பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்துவிட்டார் என்று சொன்னால் அது எனக்கு தெரியாது. அதே தேதியில் 9 ம் பிரதிவாதி 4ம் பிரதிவாதிக்கு 3 ஏக்கர் 84 சென்ட்டை கிரையம் கொடுத்துவிட்டார் என்று சொன்னால் அது எனக்கு தெரியாது. 7.1.2008 பிறகு தாவா சொத்தில் ஸ்ரீரங்ககவுண்டருக்கு எவ்வித பாத்தியமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. 4 ம் பிரதிவாதியும் 5ம் பிரதிவாதியும் சேர்ந்து தானசெட்டில்மென்ட் பத்திரங்களை

இல்லா நிலையது ஏற்கனவே வேறு வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்று சொன்னால் வழக்கு நடந்தது அந்த வழக்கு என் தந்தைக்கு ஆதரவாக தீர்ப்பானது. அ வ எண். 621/91 தனிப்பட்ட சொத்தை கூட்டு குடும்ப சொத்தாக காட்டி என் தாத்தா ஸ்ரீரங்ககவுண்டர் வழக்கை தாக்கல் செய்துவிட்டார் என்றால் அது எனக்கு தெரியாது. மேற்படி வழக்கில் தீர்ப்பின் அடிப்படையில் என் தந்தை 5ம் பிரதிவாதிக்கு சொத்துகளில் எவ்வித உரிமையும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. மேற்படி தீர்ப்பின் அடிப்படையில் என் தாயார் எழுதி கொடுத்த தானசெட்டில்மெண்ட் மற்றும் கிரைய பத்திரம் ஆகியவை சட்டபடி செல்லத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. என் தந்தைக்கு தீர்ப்பான பிறகு என் தந்தை என் தாயாருக்கு தானசெட்டில்மெண்ட் எழுதி வைத்ததால் அது செல்லும் என்று சொல்கிறேன். என் தந்தைக்கும் என் தாத்தாவிற்கும் தாவா சொத்துகளில் எவ்வித உரிமையும் இல்லாத நிலையில் அவர்கள் ஏற்படுத்தி கொண்ட ஆவணங்கள் செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. இந்த வழக்கில் 1 முதல் 3 பிரதிவாதிகளை மேற்படி தானசெட்டில்மெண்ட் மற்றும் கிரய பத்திரம் வாதிகளை கட்டுப்படுத்தாது என்று சொன்னால் சரியல்ல. அ.வ.எண் 621/91 தீர்ப்பிற்கு பின்னிட்டு என் தந்தைக்கு மேற்படி சொத்தில் பாத்தியம் உள்ளது என்று சொல்கிறேன். வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>10 ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

அ.வ.எண்.621/91 வழக்கின் அடிப்படையில் 5ம் பிரதிவாதி என் தந்தைக்கு தீர்ப்பானதின் அடிப்படையில் சொத்து பிரிந்தது என்று சொன்னால் சரிதான். அப்போது நாங்கள் கூட்டு குடும்பமாக தான் குடியிருந்தோம். என் தந்தை 11ம் பிரதிவாதிக்கு தானசெட்டில்மெண்ட் எழுதி கொடுத்துள்ளார். அதன் அடிப்படையில் என் தாயார் 12 ம் பிரதிவாதிக்கு கிரையம்

கொடுத்துவிட்டார். 13 ம் பிரதிவாதியிடம் இருந்து 10 ம் பிரதிவாதி கே.பி ஆர் மில் நிறுவனம் கிரையம் வாங்கி அனுபவித்து வரப்படுகிறது என்றால் சரியல்ல. என் தந்தை எழுதி வைத்த தானசெட்டில்மென்ட் பத்திரம் மூலம் என் தாயார் கொடுத்த கிரையம் எங்களை கட்டுப்படுத்தும் என்று சொன்னால் சரியல்ல. என் பெற்றோர்கள் எனக்கு எதிராக செயல்படவில்லை என்றும் குடும்ப நலனுக்காக மேற்படி சொத்தை கிரையம் கொடுத்துள்ளார்கள் என்று சொன்னால் சரியல்ல. குடும்ப நலனுக்காகவோ என்னுடைய வளர்ச்சிக்காவோ என் பெற்றோர் செலவழிக்கவில்லை. பொய்யாக எதிர்வாதம் செய்கிறேன் என்றால் சரியல்ல.